**I Additional District Court, Thoothukudi.**

**<u>O.S.No.154/2021                              நாள் : 30.07.2025</u>**

**<u>வா.சா.1– திரு.அமலன் ஜான் செல்வசிங்.</u>**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்தை எனக்கு கிரையம் ஒப்பந்தம் எழுதிக் கொடுத்த பிறகு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு ஒரு ஏற்பாடு ஆவணத்தை எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். பின்னிட்டு 2ம் பிரதிவாதி தாவா சொத்து குறித்து தன் மனைவி பெயரில் ஒரு ஏற்பாடு ஆவணம் எழுதி வைத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ1ல் அ.வ.எண்.113/2014 என்ற வழக்கு முடிந்த பிறகு எனக்கு 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுப்பதாக வாசகம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில் அந்த வழக்கின் எண் 173/2014 என்றால் வழக்கின் எண்ணை 1ம் பிரதிவாதிதான் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த வழக்கு 28.02.2025 அன்று முடிந்ததற்கான தீர்ப்பாணை பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ1**. 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்க தயாராக இருந்தார் என்றும், பி.சா.ஆ1 தீர்ப்பு சமயத்தில் சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் இல்லை என்பதால் கிரையம் செய்து கொடுக்க முடியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் இருப்பதை வைத்துக் கொண்டு கிரையம் எழுதிக் கொடுக்க நான் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்குள் பேச்சுவார்த்தை இல்லை என்றும், நான்தான் 2, 3 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 2, 3 பிரதிவாதிகளிடம் இருப்பதால் அவர்களுக்கு எதிராகத்தான் பரிகாரம் கேட்கமுடியும் என்றால் சரியல்ல. தற்போது 3ம் பிரதிவாதி தாவா சொத்தை 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துவிட்டதால் 4ம் பிரதிவாதிக்கு எதிராக

பரிகாரம் கேட்கமுடியும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசியமற்ற நபர் என்றால் சரியல்ல. அதனால் 1ம் பிரதிவாதிக்கு எதிரான வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

குறித்த வகை நிறைவேற்றத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் என் உறவினர்கள். 1ம் பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்ததாக காட்ட ஆவணம் உள்ளதா என்றால் ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ1 பதிவு செய்யப்படாத ஆவணம். அதை எங்கு, எப்போது தயாரிக்கப்பட்டது என்பதை வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ1ல் முத்திரைத்தாளின் பின்பகுதியில் உள்ள வாசகங்களை 1ம் பிரதிவாதிதான் எழுதினார். அந்த விபரத்தையும் வழக்குரையில் சொல்லவில்லை. வா.சா.ஆ1ல் முத்திரைத்தாளின் பின்பகுதியில் 11.12.2016, 09.07.2017, 05.08.2017, 27.09.2017 ஆகிய தேதிகளில் உள்ள மேற்குறிப்புகள் வித்தியாசமான கையெழுத்துக்களில் உள்ளன என்றால் சரிதான். இரண்டாவது, மூன்றாவது மேற்குறிப்புகளை 1ம் பிரதிவாதியின் மகன்கள் எழுதினார்கள். மேற்படி மேற்குறிப்புகளுக்கு சாட்சி கையொப்பம் உள்ளது. 27.09.2017ல் நான் பணம் கொடுத்ததாக காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வா.சா.ஆ1க்கு முன்பாகவே தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு 12.10.2007ல் ஏற்பாட்டு ஆவணம் மூலமாக எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் 2ம் பிரதிவாதிதான் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்தார்.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.07.30 18:54:34 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.